செ.வெ.எண்: 26/ 2020 நாள்: 21.04.2020

# திருப்பூர் மாவட்டம்

# திருப்பூர் மாநகராட்சிகளுக்குட்பட்ட நடைபாதைப் பகுதிகளில் தங்கியிருந்த ஆதரவற்றோரை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று நலம் விசாரித்தார்.

திருப்பூர் பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், திருப்பூர் மாநகராட்சிகளுக்குட்பட்ட நடைபாதைப் பகுதிகளில் தங்கியிருந்த ஆதரவற்றோரை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.04.2020) நேரில் சென்று நலம் விசாரித்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் நமது மாவட்டத்தில் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நோய் குறித்து பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் தொடந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருப்பூர் மாநகரப் பகுதிகளில் ஆதரவற்ற நிலையில் நடைபாதைகளில் தங்கியிருப்பவர்களை நோயிலிருந்து பாதுகாக்கும் விதமாக மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் அவர்களின் தலைமையில், ஒருங்கிணைந்த சேவை மையப் பணியாளர்கள் மற்றும் சமூக நலத்துறைப் பணியாளர்கள் அனைவரும் பழைய பேருந்து நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு ஆதரவற்ற நிலையில் தங்கியிருந்தோர்களிடம் பேச்சுவார்த்தை மேற்கொண்டதன் அடிப்படையில் மொத்தம் 162 ஆதரவற்றவர்கள் மீட்கப்பட்டு சிக்கண்ணா கல்லூரி சாலையில் உள்ள சந்திராகாவி பள்ளி மற்றும் பழனியம்மாள் பள்ளி வளாகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அனைத்து உதவிகளும் ரோட்டரி சங்கம் உட்பட தனியார் தொண்டு நிறுவனங்கள் வழங்கி வருகின்றனர். மேலும் அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.அம்பிகா, ஏ.வி.பி பள்ளி தாளாளர் திரு.கார்த்திகேயன், ரோட்டரி சங்கத் தலைவர் திரு. முகேஷ் கட்டாரி, தன்னார்வலர்கள் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**